**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.30/2023** |
| Sessions | : | | |

Deposition of witness for :

| | |
|---|---|
| Prosecution | : **P.W.4** |
| Defence | : **D.W.** |
| Court | : **C.W.** |

| **Name :** | நாகராஜ் | **S/o. :** | ரகுநாதன் |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **07.04.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் சடையப்ப தெருவில் வசிக்கிறேன். மேகலா பிரிண்டிங்பிரஸ் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவத்தன்று பார்த்தேன். 24.12.2015 அன்று அப்பாதுரை வீட்டிற்கு சென்றுவிட்டு பிறகு வாழைமரம் வெட்டி வாங்கி வருவதற்காக அவரது காட்டிற்கு போனனேன். நான் அங்கு போனபோது அப்பாதுரை கொல்லையில் கூட்டமாக இருந்தது. என்ன என்று விசாரித்தேன். 1, 2, 4 எதிரிகளை அங்கு பார்த்தேன். கையில் ஆயுதங்களோடு இருந்தார்கள். அன்றைய தேதியில் எதற்காக சண்டை நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் அவர்களுக்கு நிலம் பிரச்சனை இருப்பதாக சொன்னார்கள். ஆறுமுகம் அப்பாதுரையை அடிப்பதற்காக வந்திருந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அப்பாதுரை எனக்கு சொந்தமில்லை. நான் ஏற்கனவே அவரிடம் வாழைமரம் வாங்கியிருக்கிறேன். சம்பவத்தன்று தான் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை. அப்பாதுரை வீட்டில் வைத்து என்னை விசாரித்தார்கள். அப்பாதுரைக்கு எத்தனை இடத்தில் நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான்

நீதிமன்றத்தில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். எனது ஊரிலிருந்து நொச்சிக்குளம் 5 கி.மீ தூரம் இருக்கும். வாழைமரம் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றேன். அப்பாதுரை வீட்டிலிருந்து அவரது காடு மேற்கு திசையில் உள்ளது. நான் வழக்கிற்காக வாழைமரம் வாங்கப்போனபோது எதிரிகள் ஆயுதங்களோடு இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.